வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். DVC 4 /2020

வழக்கு சாட்சி PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜேஸ்வரி | ஜாதி | |
| கணவர்/தந்தை | சரவணன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 36 |

தேதி 18.08.2025

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

முதல் விசாரணை

நான் இம்மனுவின் மனுதார்ர் ஆவேன். எதிர் மனுதார்ர்கள் மீது அசல் மனுவில் பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்துள்ளேன். எனது தரப்பு சாட்சியத்தினை எழுத்து மூலமான பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். எனது தரப்பிற்கு ஆதரவாக 17.05.2018 தேதியிட்ட புகார்தாரரின் மனு அசல் ம.சா.ஆ.1 ஆகவும், மனுதார்ரின் ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ.2 ஆகவும், 08.03.2016 மனுதார்ர் C.M. cell ல் கொடுத்த புகார் நகல் ம.சா.ஆ.3 ஆகவும், 07.10.2016 மனுதாரர் மாதவரம் பால்பண்ணை காவல் நிலையத்தில் கொடுத்த புகார் ம.சா.ஆ.4 ஆகவும், 29.01.2018 தேதியிட்ட, மனுதாரர் மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் கொடுத்த புகார் நகல் ம.சா.ஆ.5 ஆகவும், குடிசை மாற்று வாரியம் மனுதாரரின் தாயாருக்கு கொடுத்த இடஒதுக்கீடு நகல் ம.சா.ஆ.6 ஆகவும், 2017 தேதியிட்ட மனுதாரர் வசிக்கும் வீட்டை உடைத்த புகைப்படம் நகல் ம.சா.ஆ.7 ஆகவும், 02.07.2018 மனுதாரர் தரப்பு சாட்சி வாக்குமூலம் நகல் ம.சா.ஆ.8 ஆகவும், 21.05.2018 எதிர் மனதார்களுக்கு அனுப்பிய நோட்டிஸ் நகல் ரசீது ம.சா.ஆ.9 ஆகவும், குறியீடு செய்கிறேன். எனது மனுவினை ஏற்று கோப்பிற்கு எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.